தொகுதி - XVI | கார்த்திகை- 2016 | இதழ் - 3

# சிந்தனை

பதிப்பாசிரியர்

**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா**

கலைப்பீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

2017

**CINTANAI** The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is a refereed Journal, Its referees come form University Scholars and the National scholarly community.

| | |
|---|---|
| **Editor** | Professor Selliah Krishnarajah |
| **Associate Editor** | Dr. K.Kajavinthan |
| **Managing Editor** | Dr. S. Santhirasegaram |
| **Editorial Committee Members** | Dr. K.Shriganeshan<br>Dr. K.Arunthavarajah<br>Dr. (Mrs) J. Rasanayagam<br>..................<br>Mr. R. Rajeshkannan<br>Mrs. S.Arulanantham<br>Mrs. S. Prabaharan |

| | |
|---|---|
| **Annual Subscription** | 1500/- SLR / 15US $ |
| Price Per Copy | 500/-SLR |
| **Published by** | The Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka. |
| **Printed by** | Harikanan (Pvt) Ltd., # 681, K.K.S. Road, Jaffna. |
| **ISSN** | **2478 - 1061** |

# சூழல் பாதுகாப்பு நெறிமுறைகள் - வேத, இதிஹாச, புராண இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு குறிப்புரை

சிறிகலா ஜெகநாதன்

**ஆய்வுச்சுருக்கம் :**

இந்த உலகம் மனிதனுடையது மட்டுமன்று மனிதன் உலகில் ஓர் அம்சமே. உலகைச் சார்ந்துதான் மனிதன் வாழ முடியும். பூமியில் வாழ்வியல் ஒரு வலையாகப் பின்னப்பட்டுள்ளது. மிருகங்கள், பறவைகள், தாவரங்கள், இயற்கையின் ஒவ்வொரு அம்சங்களும் இந்த வலைக்குள் அடங்கும். இந்திய சமயமரபு சமூகத்துடனும், தத்துவத்துடனும், மொழியியலுடனும் இணைந்தது போல சூழலியலுடன் இணைந்துள்ளது. புராதன இந்துக்களின் சமய நூல்களாகிய வேதங்களும், இதிகாசங்களும், புராணங்களும், மனிதன் இயற்கையை ஓம்புவதன் அவசியம் பற்றிக் குறிப்பிடுகின்றன. சட்ட ரீதியாகவும், வாழ்க்கை நெறிமுறையூடாகவும், போதனை வழியாகவும், சூழல் பாதுகாப்பின் அவசியம் பற்றிய கருத்துக்கள் இவற்றில் எடுத்துரைக்கப்படுகின்றன.

**திறவு சொற்கள் :** ரிதம், பிரபஞ்சம், மெஞ்ஞானிகள், சூழல், பர்யாவர்ணம்

## 1. அறிமுகம்

அறிவியல், தொழில்நுட்பம் என்ற பெயரில் வரைமுறையில்லா வளர்ச்சியில் வேகமாக நகரும் யதார்த்த உலகில் சூழலியல் மிகவும் முக்கியமாக பரிசீலிக்கப்பட வேண்டிய விடயமாகும். இயற்கைவளமும், சுற்றச்சூழலும் மனிதகுல வளர்ச்சியின் முக்கிய கூறுகளாகும். இவ்வுலகம் இனிது; நீர் இனிது; நிலம் இனிது; ஞாயிறு இனிது; திங்களும் நன்று எனப் பாரதியார் சிலாகிப்பது போல் இவ்வுலகம் இனிதாக இருக்க வேண்டுமானால் நம் முன்னோர் வாழ்ந்து காட்டிய நெறிமுறைகளை நோக்குவது அவசியமாகும் (பாரதியார், 2007, ப. 42). இந்துக்களின் புனித நூல்களான வேத உபநிடதங்களும், இதிகாசங்களும், சமூக - சமய நல்லிணக்க கோட்பாடுகளைக் கொண்டவை.

உலகில் மனிதனும் இயற்கையும் சேர்ந்து வாழ்வது (Co - Exist), இணைந்து செயற்படுவது (co - operate) மற்றும் செழித்தோங்குவது (Flurish) எவ்வாறு என்பது போன்ற விடயங்களுக்கு வேதகால ரிஷிகளும், கவிகளும் தீர்வு காண முயன்றிருக்கிறார்கள். அவற்றைத் தமது இலக்கியங்களான வேதங்களிலும், உபநிடதங்களிலும், இதிஹாசங்களிலும் பதிவு செய்துள்ளார்கள். பிரபஞ்சம் பற்றிய மெய்ஞ்ஞானிகளது கருத்து இன்றைய விஞ்ஞானிகளது கருத்துக்களினின்றும் மாறுபடாதவை. இன்றைய சமூகத்தினரின் சூழல் ஆய்வுக்கு அவை பெரிதும் உதவுகின்றன.

## 2. வேத ரிஷிகளின் சூழல் பற்றிய அறிவு

"சர்வம் வேதாத் பிரசித்யதி" என மனு தர்ம சாஸ்திரம் வேதங்கள் சகல அறிவு ஞானங்களுக்கும் இருப்பிடமாய் இருப்பதை சுட்டுகிறது. (மநு 2.7)

பிரபஞ்சத்தின் தோற்றம் அது மனிதருடன் இணையும் தன்மை, மனித வாழ்வு வளம் பெற வேண்டுமானால் பிரபஞ்சத்துடன் இணைந்து மனிதன் ஒழுக வேண்டிய முறைமை என்பவற்றை வேதங்களும், இதிகாசங்களும் கூறுகின்றன. ப்ரயாவரணம் என்ற பதம், சுவர், திரை சூழப்படுதல், மூடப்படுதல் போன்ற கருத்துக்களைக் குறிக்க சம்ஸ்கிருதத்தில் வருகின்றது (Rathakrishnasastri 1998: P.62). சுற்றுச்

சூழலைக் குறிக்க பர்யாவரணம் என்ற பெயர் இன்று சமஸ்கிருத உலகில் வழக்கிலுள்ளது. ஆதியில் நீர். காற்று, தாவரங்கள் என்ற இயற்கைத் கூறுகள் எங்கும் சூழ்ந்து காணப்பட்டமையையும் அவை சந்தாம்ஸி என்ற பெயரில் அழைக்கப்பட்டமையையும், அவை சந்தாம்ஸி என்ற பெயரில் அழைக்கப்பட்டமையையும் அதர்வவேதம் சுட்டுகிறது.

"தீரிணிச் சாந்தாம்சி கவயோ வியேதிரே புருரூபம் தர்சிதம் விஸ்வலக்ஷணம் ஆபோ வாதா ஔஷதயயஸ் தாந்யேகஸ்மிந் புவன அர்ப்பிதாநி" (ATh,1962: 18.1.17) .

படைப்பின் அடிப்படை மூலங்களான இறைவனுக்கு அடுத்து வெளி, காற்று, நெருப்பு, நீர், பூமி என்பன காணப்பட்டதனை தைத்திரீய உபநிஷதம் எடுத்துக் கூறுகிறது.

"நம்மில் ஆன்மாவாக விளங்குகின்ற அந்த இறைவனில் இருந்து வெளி தோன்றியது. வெளியிலிருந்து காற்று, காற்றிலிருந்து நெருப்பு, நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து பூமி, பூமியிலிருந்து செடி கொடிகள், செடி கொடிகளிலிருந்து உணவு, உணவிலிருந்து மனிதன் தோன்றினான்" (தை. உப. 2.1.2).

வெளி (Space) காற்று, நெருப்பு, நீர், பூமி என்ற ஐந்தும் பிரபஞ்சத்தின் அடிப்படை மூலகங்களாக உள்ளன என்பதையும், இந்த ஐந்தின் நிறைவாக மனிதன் உள்ளான் என்பதையும், இந்த ஐந்தின் நிறைவாக மனிதன் உள்ளான் என்பதையும் உபநிடதங்கள் காண்கின்றன.

மிகப்பழந் தமிழ் இலக்கியமான புறநாநூற்றில் "மண் திணிந்த நிழனும் நிலன் ஏந்திய விசும்பும் விசும்பு தைவரு வளியும் வளித் தலை இய தீயும் தீ முரணிய என்றாங்கு ஐம்பெரும் பூதத்து இயற்கை போல்" எனவரும் செய்யுளிலும் நிலம், விசும்பு, காற்று, தீ, நீர் என்ற ஐந்தும் பஞ்ச பூதங்களாய் குறிப்பிடப்பட்டுள்ளன (புறநானூறு ப.3). அணுக்களால் செறிந்த நிலம், நிலத்தின் கண் ஓங்கி நிற்கும் வானம், வானளவு பொருந்தி வியாபித்து நிற்கும் காற்று, காற்றினால் பெருகும் தீ, தீயுடன் மாறுபட்ட நீர் இவை இயற்கையின் ஆற்றல்களாய் குறிப்பிடப்படுகின்றமையை அவதானிக்கலாம். கண்கண்ட கடவுள்களாக சூரிய, சந்திரன் போற்றப்படுகின்றனர். "ஆதித்யேந வாவ ஸர்வே லோகாமஹீயந்தே" (தை. உப.1.5.2). சூரியனால்தான் எல்லா உலகங்களும் வாழ்கின்றன என வேதங்கள் சூரியனைப் போற்றுகின்றன. சந்திரனுக்கும். உயிரினங்களின் வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. 'உயிர்ச்சக்தி வடிவாகிய சந்திரனாக ஆகி செடி, கொடிகளை எல்லாம் வளர்கின்றேன்' எனக் கீதையில் கிருஷ்ண பகவான் வாயிலாக இது விளக்கப்படுகின்றது (கீதை 15.13). செடி, கொடிகள் மட்டுமன்றி, உயிரினங்கள் அனைத்தும் வளர்வதற்கான சக்தியை சூரியனிலிருந்தும் சந்திரனிலிருந்தும் பெறுகின்றன எனப் பண்டைய ரிஷிகளும், ஞானிகளும் உணர்ந்திருந்தனர். சூழல் பற்றி இவர்கள் அறிந்திருந்ததுடன் மனிதனையும், இயற்கையையும் படைப்பையும் இவர்கள் இணைக்கின்றனர்.

**3. இயற்கையோடு இணைந்த வாழ்வு**

வேதங்களும் அவை வழிவந்த நூல்களும் இயற்கைப் போற்றியதுடன், அவற்றைத் தெய்வமாகவும் மதித்தன. விடியற்காலைப் பொழுது உஷையாகவும், மழை பர்ஜன்யன் என்ற தெய்வமாகவும், காற்று, வாயு, வாதம் என்னும் தெய்வங்களாகவும் போற்றப்பட்டன. இரவு தரும் ஓய்விற்காக " இரவின் தேவி நமக்கு அருளட்டும், பறவைகள் மரத்திலுள்ள கூடுகளுக்குத் திரும்புவோம்" என ராத்திரிதேவியாக இரவினை உருவகப்படுத்தும் செய்யுள் வேதகால ரிஷியின் இயற்கையோடு ஒன்றித்த மனநிலையைப் பிரதிபலிப்பதாகும் (ரிக்.வே.10.127.4). பிறப்பிலும், இறப்பிலும் இதிஹாசப் பாத்திரங்கள் இயற்கையுடன்

இணைந்தனர். மஹாபாரதம் கர்ணனை சூரிய புத்திரனாகவும் பீமனை வாயுபுத்திரனாகவும் கூற சீதை நிலத்திலிருந்து உழவின் போது தோன்றியவளாக ராமாயணம் கூறுகின்றது. ஸ்ரீராமர் பரமபதம் அடையும் போது அசையும் பொருட்களும் சரயுநதியின் புனித நீரில் நனைந்து தேவலோகம் அடைந்ததை இராமயணத்தில் காணலாம் (7.110.24 - 26).

வேதங்கள் கூறும் ரிதம், கர்மம், மறுபிறவிக் கோட்பாடுகள் இயற்கையுடன் இணைந்தவை. உலகம் ஒழுங்காக இயங்குவதற்கும், இரவு,பகல் மாறி மாறி வருவதற்கும் ரிதம் என்ற ஒழுங்கு முறையே காரணம் என்பதை வேதவிலக்கியங்கள் அறிவிக்கின்றன. "மேலான உண்மை, மாறாத நேர்மை, புனிதம், தவம், நல்லொழுக்க வாழ்க்கையால் வரும் ஆற்றல், வேள்வி இவையே பூமியைத் தாங்கின்றன" எனப் பூமியைத்தாங்கும் ஆறு பொருட்களில் ஒன்றாக ரிதம் என்ற உண்மையை அதர்வேதம் கூறுகிறது (அத.சூவ 12.7.1). "ஸத்யம் ப்ருஹத்ரித முக்ரம் தீக்ஷா தபோப்ரஹ்ம யக்ஞஹ ப்ருதிவீம் தாரயந்தி" நேர்மை, உண்மை, தெய்வ நெறி, அண்ட ஒழுங்குமுறை என்பன ரிதம் என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டன (Raatharishnasastri, 1998, P.100). ரிதத்தின் காவலனான வருணனிடம் மக்கள் மற்றைய தேவர்களை விட பயபக்தியுடன் வணங்கினர். பிரபஞ்ச ஒழுங்கை மீறியவர்கள் யாவராயினும் தண்டிக்கப்பட்டனர். இதிஹாசங்களும், புராணங்களும் அவற்றின் வழிவந்த இலக்கியங்களும் இதனைக் கதை வடிவில் கூறுகின்றன. காமக் கடவுளான மன்மதன் சிவனுக்கு காமத்தை ஊட்டுவதற்காக வசந்த காலம் வரும் முன்னரேயே இளவேனிலை ஏற்படுத்த முயன்றான். அகாலத்தில் வஸந்தம் ஏற்பட்ட போது காட்டிலுள்ள தபஸ்விகள் கூட மனவேறுபாடுகளை அடக்க முடியாமல் திகைத்தனர் (குமாரசம், 3.34). ஆயினும் சிவனின் நெற்றிக்கண்ணால் இறுதியில் மன்மதன் சாம்பலானான்.

செய்கின்ற கருமங்களால் யுகங்தோறும் புல், பூண்டு, பறவை, மிருகங்கள் எனப்பல பிறவிகளையும் மனிதன் எடுக்கின்றான் என்ற மறுபிறவிக் கோட்பாடு பலஜீவ ராசிகளையும் மனிதனையும் இணைக்கின்றது.

**4. பூமி**

பிரபஞ்சத்தின் மூலக்கூறுகளில் ஒன்றாகிய பூமியை அதர்வ வேதத்தில் காணப்படும். பூமி சூக்தங்கள் சிறப்பிக்கின்றன. பூமி சார்ந்த அனைத்தையும் பாதுகாப்பவளாக பூமித்தாய் சிறப்பிக்கப்படுகின்றாள்.

"பூமித்தாயே, உன்னைத் தோண்டி எதை நட்டாலும் அது விரைவாக வளரட்டும், தூய்மைப்படுத்துபவளே, உனது மர்மப் பகுதிகளைசேதப்படுத்தாமல்இருப்போமாகுக" என அதர்வவேதம் கூறுகிறது (அத.வே 12.16). எமக்குச் செல்வத்தைத் தருகின்ற பூமியை நாம் சேதப்படுத்தக்கூடாதென்ற கருத்து பூமி சூக்தத்தில் காணப்படுகின்றது.

பூமியின் மூன்றிலொரு பகுதி காடுகள் இருக்க வேண்டும் என்பது நியதி. வனங்கள் மழையைத் தருவதற்கு உதவுவதுடன் நிலச்சரிவையும் கட்டுப்படுத்துகின்றன. ரிஷிகள் தவம் செய்வதற்குரிய இடங்களாக காடுகளையே நாடினர். முனிவர்களுக்குத் தேவையான காய், கனி வர்க்கங்களை அவை கொடுத்துதவின அவர்கள் தவம் செய்ய வேண்டிய அமைதியையும், பிராண வாயுவையும் அவை நல்கின. தண்டகாரண்யம், நைமிசாரண்யம், பஞ்சவடி, சித்திர கூடம் போன்ற வனப்பகுதிகளை இராமயணம் வர்ணிக்கின்றது.

**5. நீர்**

வாழ்க்கைக்குத்தேவையான நீர் பெறப்படும் இடங்களாக ஐந்தினை ரிக்வேதம் கூறுகிறது. மழைநீர், இயற்கைநீரூற்று, வெட்டப்பட்ட கிணறு, ஆழமில்லாஏரிகள்,

சமுத்திரங்கள்என்பன அவையாகும் (ரிக்வே 7.49.2). தண்ணீர் உடலைத்தூய்மையாக்குவது போல மனதையும் தூய்மை செய்யும் வண்ணம். ரிக்வேதத்தில் மார்ஜன மந்திரங்கள் வேண்டுகின்றன. மார்ஜனம் என்றால் தூய்மைப்படுத்துதலாகும் (Rathakrishna sastri, 1998,P.384). "தண்ணீரின் தேவதைகளே, உயர்ந்த சுகத்திற்கு நீங்கள் காரணமாக உள்ளீர்கள், அத்தகைய நீங்கள் எங்களுக்கு மகிமை பொருந்தியதும், மேலானதுமான நோக்கையும் ஆற்றலையும் அளியுங்கள்" (ரிக் வே 10.91.1). மேற்கண்ட செய்யுள் அபிஷேக வேளையிலும், சந்தியாவந்தனத்தின் போதும் ஓதப்படுவதாகும். பண்டைய ரிஷிகளும், மன்னர்களும் ஜலாஞ்சலி செய்து தெய்வங்களை திருப்திப்படுத்தினர். மூன்று தடவைகள் நீரை உட்கொண்டு தெய்வங்களை வணங்குவது ஜலஜபமாகும். இம் முறைகளால் தொற்று நோய்கள் நீங்குவதுடன் உடல் தூய்மையடைவதாக முன்னோர்கள் கருதினர். சமகாலத்தில் நீரை உட்கொண்டு நோய் நீங்கும் முறையின் (Water Therapy) ஒத்ததாக மேற்கூறப்பட்ட வணக்கமுறைகள் காணப்பட்டன. சரஸ்வதி, நர்மதை, கங்கை, யமுனை, ரேவா போன்ற நதிகள் பற்றிய குறிப்புக்கள் புராணங்களில் காணப்படுகின்றன. இவற்றில் தீர்த்தமாடுவோர் தமது பாவங்களைப் போக்கிக் கொள்வர்.

**6. வாயு**

நீர்போன்று வாழ்க்கையின் ஆதாரத்துக்குக் காரணமான வாயுவை புவனத்தின் கரு என்றும் தேவர்களின் ஆத்மா என்றும் என்றும் வேதங்கள் வர்ணிக்கின்றன (ரிக்வே10.168.4). அந்தரிக்ஷம் என்ற இடைவெளியின் தெய்வமாக காற்றுக் கடவுள் போற்றப்படுகின்றார். சுத்தமான காற்று மகிழ்ச்சிக்கும். நோய்நீக்கத்திற்கும் காரணமாகும். இது பற்றியே "காற்றே சிகிச்சை செய்யும் மருந்தை வீசவும் நீயே ஔஷதமாகிறாய்" என வேதப்பாடல்கள் வாயுவைப் புகழ்கின்றன (ரிக் வே 10.186.1). நம்மைச் சுற்றியுள்ள வாயுக்கள் மட்டுமன்றி பிராணன், அபானன், அபானன், உதானன், சமானன், விரானன் என உடம்பிலுள்ள வாயுக்களையும் உபநிடதங்கள் வகுத்துக் கூறுகின்றன (தை. உப. 1.7). பிராணன் உயிர்களின் ஆதாரம். இதனைச் சுத்திகரிக்கும் பிரணயாமம் போன்ற பயிற்சிகளை புராதன ரிஷிகள் அறிந்திருந்தனர்.

**7. விலங்குகள், மரம், செடி, கொடிகளின் பாதுகாப்பு**

மிருகங்களும், பறவைகளும் மனிதரின் வாழ்க்கையோடு இணைந்தவை. செடி, கொடிகள் மனிதர்க்குத் தேவையான காய், கனி வர்க்கங்களைத் தருகின்றன. இவற்றைப் பேண வேண்டும் என்ற கருத்தை வேத, இதிஹாசங்கள் தருகின்றன. புருஷ சூக்தம் காட்டு விலங்குகள், ஆகாயப் பறவைகள், வீட்டு விலங்குகள் என மூவகையாகப் பிராணிகளை பிரித்துக் கூறுகிறது (ரிக் வே 10.90.10). பசுமாடுகள், எருதுகள், குதிரைகள் என்பன அக்கால ஆரியர் வாழ்வில் பிரதான விலங்குகளாகப் பயன்பட்டன. பூஷன் என்னும் தெய்வத்தை விளித்து "பூஷகாஹா அநுஏது நஹ/ பூஷா ரக்ஷது அர்வதஹ/" என பசுக்களையும், குதிரைகளையும் பாதுகாக்கும்படி வேதகாலகவிகள் வேண்டுகின்றனர் (ரிக் வே 6.54.5). பசுவை வீணாகக் கொல்பவன் அப்பசுவின் ரோமங்களின் எண்ணிக்கையளவு பிறவி எடுத்து பிறரால் கொல்லப்படுவான் என மநு கூறுவர் (மநு. 5.38). ஆண் அன்றில் பறவையைக் கொன்றதைப்பார்த்த பெண்ணிணையின் சோகக்குரலே வால்மீகியை ராமாயணம் பாடத்தூண்டியது. முனிவர்களும் மன்னர்களும், மிருகங்களும், பறவைகளும் நீர்குடிக்கும்படியும் புற்களை மேயும் பொருட்டும் நீர் நிலைகளையும் புற்றரைகளையும் அமைத்தமையை இதிகாசங்களிலும், புராணங்களிலும் காணலாம். செடி, கொடிகள் மனித வாழ்க்கையோடு இணைந்தவை. பகவான் கிருஷ்ணர் இடைச்சிறுவர்களுக்க இவற்றின் பயன் பற்றிக் கூறுகிறார்.

"இலை, பழம், புஷ்பம், வேர், மரவுரி, கிளை, வாசனையுள்ள பிசின் இவையனைத்தாலும் இவை அண்டியவர்களுடைய விருப்பத்தை பூர்த்தி செய்கின்றன. காற்று, வெயில், பனி இவற்றிலிருந்து எங்களைக் காப்பாற்று கின்றன" (பாகவதம் 10.22. 33 - 36).

செடி, கொடிகள் சிறந்த மூலிகைகளை ஔஷதங்களாய் தந்தமையை வேதவிலக்கியங் களில் காணலாம். ரோஹிணி, திப்பிலி, அபாமார்க்கம் என்னும் மூலிகைகளின் பயன் பாடு குறித்து அதர்வவேதம் கூறுகின்றது. ரோஹிணி உடைந்த எலும்பை ஒட்டப்பயன் பட்டது. இந்திரஜித்தின் ஆயுதத்தால் மூர்ச் சையான இலக்குமணனை சஞ்ஜீவினி மூ லிகையால் அநுமன் உயிர்ப்பித்தது குறித்து இராமாயணம் கூறுகின்றது.

**8. யக்ஞம்**

எடுப்பது, திருப்பிக் கொடுப்பது என்ற நியதியை அடிப்படையாக கொண்டு படைப்பு யக்ஞமாக புருஷசூத்திரத்தில் கூறப்படுகின்றது. பூமியிலுள்ள அனைத்துப் பொருட்களும் யக்ஞத்துடன் தொடர்புபடுகின்றன. நாம் பிரபஞ்சத்திலிருந்து நீர், உணவுப் பொருட்கள், பிராணவாயு என்பவற்றை எடுக்கின்றோம். அதைக் கரியமில வாயு, கழிவுப் பொருட்கள் எனத் திருப்பிக் கொடுக்கின்றோம்.

அதுவே சமநிலை வேள்வி நியதியும் அதுவே. கீதையில் கிருஷ்ணபிரான், "நீங்கள்யக்ஞத்தால் தேவர்களைப் பேணுங்கள். அவர்கள் உங்களைப் பேணுவார்கள்" என்று கூறுவது இதையே தான். (கீதை 3.11) யாகப்புகையானது வளிமண்டத்தை தூய்மைப்படுத்துவதுடன் ஆயுளையும், கண்பார்வை முதலியவற்றையும் பாதுகாப்பதாக யசுர்வேதம் கூறும் "ஆயர் யக்ஞேந கல்பதாம் பிராண யக்ஞேந கல்பதாம் சக்சுர் யக்ஞேந கல்பதாம்."

**9. முடிவுரை**

மனிதனின் நோய்த்துன்பத்திற்கு மரபு (Heredity) சூழல் (Engvironment) என்ற காரணிகள் ஏதுக்களாக அமைகின்றது. மரபுவழி நோய்த் தாக்கத்திற்கு தாய், தந்தையர், அவர் வழி மூதா தையர் போன்றோர் காரணமாகின்றனர். சூழல் வழிவந்த பிணிகள் சூழல் பாதிப்புறுவதால் உண்டாகின்றது. மனிதன் சூழலுக்கு செய்யும் தீமையால் சூழல் மாசடைகின்றது. மனிதன் இயற்கையோடு பிணைந்த அங்கமாவான். எனவே சூழலைப் பாதுகாக்கவேண்டியது அவனது கடமையாகும்.

மனிதன் நீண்டகாலம் வாழவேண்டும் என்ற எண்ணத்தை வேத, இதிஹாசங்கள் பிரதிபலிக்கின்றன. பிரபஞ்சத்திலுள்ள அனைத்து அம்சங்களும் எமக்கு உதவுபவை. அவை தூய்மையாக இருந்தால் தான் அவற்றிடமிருந்து நாம் நன்மையைப் பெறலாம்.

"சிறந்த செயல்களை செய்கின்ற நமக்கு காற்று இனிமையாக வீசட்டும். நதிகள் இனிய நீருடன் ஓடட்டும். பகலும், இரவும் இனிமையைச் செய்யட்டும். செடிகள் வளம் பெற வாழட்டும்" (தை. உப 3.1). என்ற ரிஷிகளின் பிரார்த்தனை அவர்கள் இயற்கைச்சூழலை பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்ததன் வெளிப்பாடாகும்.

**சுருக்கம்:**

அத. வே - அதர்வேதம்
குமாரசம் - குமாரசம்பவம்
ரிக்.வே - ரிக்வேதம்
யசு.வே -யசுர்வேதம்
Ath - Atharavaveda
கீதை - பகவத்கீதை
தை. உப - தைத்திரீய
உபநிஷதம்

## உசாத்துணை நூல்கள்


1. காளிதாசர், 2007, குமார சம்பவம், சுகவனேச்வரன் (தமிழாக்கம்) மதுரை.
2. பாரதியார், 2007, பாரதியார் கவிதைகள், பூம்புகார்ப் பதிப்பகம், சென்னை.
3. புறநானூறு மூலமும் உரையும், 2004, அ.மா.பரிமணம் (பதிப்பாசிரியர்) நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.
4. மனுதர்ம சாஸ்திரம், 1920, திருலோக சீதாராம் (பதிப்பு) அலைகள் வெளியீட்டகம், சென்னை.
5. தைத்திரீய உபநிஷதம், 2010, சுவாமி ஆததோஷானந்தர் (விளக்கவுரை) ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை
6. வேதமந்திரங்கள், 2000, ஆததோஷானந்தர் (விளக்கவுரை) ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை.
7. ஸ்ரீமத் பவத்கீதை, சித்பவானந்தர் (உரை), 1972, ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம், திருச்சி.
8. ஸ்ரீமத்பாகவதசாரம் இரண்டாம் பாகம், 1966, அண்ணா (உரை) ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை.
9. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் (2012) முதலாம், இரண்டாம் பாகங்கள், கீதாபிரஸ், கோரக்பூர்.
10. Atharvaveda 1962. (Sayanccariya Commentary) Visvehavaranand Vedic Research institute.
11. Macdonell, A., 1917. A vedic Reader, Oxford Uiniversity presss London.
12. Rathakrishna Sasthiri, S.V. ,1998, A Learners Sanskrit Tamil, English Dictionery Education Society, Chennai.